# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண் : 151/மா/2023**

**நாள் : 12.07.2023**

டாக்டர். சு.கு.இமயவரம்பன்,
வேலூர். – முறையீட்டு மனுதாரர்

ஆணையர், வேலூர் மாநகராட்சி,
வேலூர். – எதிர்மனுதாரர்

வேலூர், பழைய புறவழிச்சாலை (சேலம் பட்டறை), ரேவதி வணிக வளாகம், 11/அ, என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர். சு.கு.இமயவரம்பன் என்பவரின் 18.05.2023 நாளிட்ட மனு, 19.05.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 151/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

வேலூர், பழைய புறவழிச்சாலை (சேலம் பட்டறை), ரேவதி வணிக வளாகம், 11/அ, என்கிற முகவரியில் வசிக்கும் டாக்டர்.சு.கு.இமயவரம்பன் என்பவர் தனது 18.05.2023 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

" 20.04.2023 அன்று வேலூர் மாநகர ஆணையர் மற்றும் வேலூர் மாநகராட்சி 4–வது மண்டல துணை ஆணையருக்கு, வேலூர் மாநகராட்சி 4–வது மண்டலம் –48வது வட்டத்தில் உள்ள காதர்பேட்டை தெருக்களில் நாய்களை பிடிக்குமாறு பதிவுத்தபால் மூலம் மனு கொடுத்தேன். ஆனால் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் அங்கு உள்ள ஆடுகள், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அவதிக்குள்ளாகின்றனர். ஆகையால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவச்செயலர் தக்க நடவடிக்கை எடுத்து காதர்பேட்டை மக்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் புகார் கொடுத்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காத வேலூர் மாநகர ஆணையர் மற்றும் வேலூர் மாநகராட்சி 4வது மண்டல துணை ஆணையர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 20.04.2023 அன்று வேலூர் மாநகர ஆணையர் மற்றும் வேலூர் மாநகராட்சி 4வது மண்டல துணை ஆணையருக்கு கொடுத்த மனுவின் நகல் மற்றும் பதிவுத்தபால் சென்றடைந்ததற்கான பதிவுத்தபாலின் ஒப்புகைச்சீட்டின் நகலையும் இணைத்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

**2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, இம்முறைமன்ற நடுவத்தின் 02.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.**

**3) வேலூர் மாநகராட்சி மண்டலம்–04 உதவி ஆணையர் தனது 04.07.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:**

" வேலூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பொது நிதி 2022–23ன் கீழ் மாநகராட்சி பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களில் முதற்கட்டமாக 1200 தெரு நாய்களுக்கு தன்னார்வ தொண்டு அமைப்பு மூலம் நாய்களை பிடித்தல், வெறிநாய் தடுப்பு ஊசி போடுதல், கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல், உணவிட்டு பராமரித்தல் மற்றும் மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள M/s. Global Foundation, Solai Nagar, Old Katpadi, Vellore-07 அவர்கள் அளித்த குறைந்த ஒப்பந்தப்புள்ளி மாமன்றத்தால் ஏற்கப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. மேலும் இப்பணியினை 01.12.2022 முதல் 31.05.2023 நாட்களுக்குள் முடிக்க அன்னாருக்கு உத்தரவிடப்பட்டது.

மேற்கண்ட பணி ஆணையின்படி மேற்படி நிறுவனம், வார்டு–48ல் 28.01.2023 அன்று ஆண் நாய்கள் 10 மற்றும் பெண் நாய்கள் 10 என மொத்தம் 20 நாய்களும், 29.01.2023 அன்று ஆண் நாய்கள் 7, பெண் நாய்கள் 13 மொத்தம் 20 நாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து பராமரிக்கப்பட்டு மீண்டும் பிடித்த இடத்திலேயே விடப்பட்டது. மேலும் 26.12.2022 முதல் 10.03.2023 வரையில் வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தமாக 1212 நாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி (ARV) போடப்பட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடங்களிலேயே விடப்பட்டது.

தற்பொழுது இரண்டாவது கட்டமாக மீண்டும் 1200 தெருநாய்கள் பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி போட்டு உணவிட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுவதற்காக ரூ.9,90,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

இதன்படி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் மனுதாரரின் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இடங்களில் சுற்றித்திரியும் நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி போட்டு உணவிட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதனை இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

**4) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 06.07.2023 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 21.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) மனுதாரர் 06.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகாமல் தனது 26.06.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்:**

" 18.05.2023 அன்று வேலூர் மாநகராட்சியின் மீது புகார் மனு நடுவத்திற்கு செய்திருந்தேன். அந்த மனு தங்களால் பெறப்பட்டு 151/மா/2023 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்கின்ற தகவல் வந்தது. நான் புகாராக கொடுத்த பிரச்சனைக்கு, வேலூர் மாநகராட்சி சரி செய்த காரணத்தினால், நான் கொடுத்த புகார் மனுவை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**6) வேலூர் மாநகராட்சியின் சுகாதார அலுவலர் 06.07.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார் :**

" வேலூர் மாநகராட்சியில் திரியும் நாய்களை பிடித்திடவும், அவற்றிற்கு ABC செய்திடவும் முறையான ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ளப்பட்டு, மாமன்ற தீர்மானத்தின்படி குறைந்த ஒப்பந்தப்புள்ளியை அளித்த Global Foundation என்கின்ற நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டது. கடந்த 2023 ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மொத்தம் 1200 நாய்கள் பிடிக்கப்பட்டு, கருத்தடை அறுவை சிகிச்சை (ABC) செய்யப்பட்டும், மேலும் வெறிநாய் தடுப்பூசி (ARV) போடப்பட்டு, சிறிது நாட்களில் சிகிச்சைக்குப் பின்னர் நாய்கள் பிடித்த இடத்திலேயே விடப்படுகின்றன என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வேலூர் மாநகராட்சி மண்டலம்–4 உதவி ஆணையரின் 04.07.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) மனுதாரரின் மனு, கடிதம் மற்றும் வேலூர் மாநகராட்சி, மண்டலம்–04 உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வேலூர் மாநகராட்சி சுகாதார அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. அதில் பின்வரும் விவரங்கள் கண்டறியப்படுகின்றன:

மனுதாரர் தங்கள் பகுதியில் சுற்றித்திரியும் நாய்களை பிடிக்க நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மாநகராட்சியானது மனுதாரரின் புகாரின் மீது தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து வெறிநாய் தடுப்பூசி போட்டு உணவிட்டு பராமரித்து மீண்டும் பிடித்த இடத்திலேயே விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு 12(1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manner, namely:-

(a) x x x
(b) x x x
(c) x x x
(d)Order other necessary remedial measures considering the facts and circumstances of the case அடிப்படையிலும் இந்நிகழ்வில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

வேலூர் மாநகராட்சி மண்டலம் 04 உதவி ஆணையரின் அறிக்கையிலும் மாநகராட்சி சுகாதார அலுவலர் வாக்குமூலத்திலும் இம்முறைமன்றத்திற்கு தெரித்துள்ளவாறு அனைத்து தெருநாய்களையும் The Prevention of Cruelty (Capture of Animals) Rules, 1979–ல் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி பிடித்திடவும், The Animal Birth Control Rules, 2023–ல் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி இனப்பெருக்கக்கட்டுப்பாடு நடவடிக்கையை மேற்கொண்டும், Anti-rabies தடுப்பூசிகளையும் அவைகளுக்குச் செலுத்தி அதன்பின்னர் விடுவிக்குமாறும் பொதுமக்களுக்கும், சிறுவர் சிறுமியர்கள் மற்றும் அங்குள்ள பிராணிகளுக்கும் ஆபத்தின்றி நடமாடும் சூழ்நிலையை ஏற்படுத்தவும் மேலும் 30 நாட்களுக்கு ஒருமுறை சுற்றித்திரியும் நாய்களைப் பிடித்து மேற்சொன்ன விதிகளின்படி நடவடிக்கை எடுக்கவும் வேலூர் மாநகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் The Animal Birth control Rules 2023 விதி 9(4)–ன்படி தெரு நாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்த அனைத்து மாநகராட்சிகளிலும் கண்காணிப்புக்குழு (Monitoring committee) அமைத்திடவும் தெரு நாய்களை பிடிக்கும்போது அவற்றை துன்புறுத்தா வண்ணம் வழிகாட்டு நெறிமுறைகளின்படி பிடித்திடவும் உறுதி செய்திட அனைத்து மாநகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரைகளை வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

**2023–ஆம்** ஆண்டு ஜூலை திங்கள் **12–ஆம்** நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. டாக்டர் சு.கு.இமயவரம்பன்,
   11/அ, ரேவதி வணிக வளாகம்,
   (சேலம் பட்டறை)
   பழைய புறவழிச்சாலை,
   வேலூர் – 632 004.
2. ஆணையர்,
   வேலூர் மாநகராட்சி,
   வேலூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.
4. இணைஇயக்குநர்
   ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சிநிர்வாகஇயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை– 600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவி பதிவாளர்